உ

# கீழ்ப்பிரிவு

# சைவமன்றம்
# சிட்னி அவுஸ்திரேலியா

# சைவ சமய அறிவுத்திறன்
# தேர்வு - 2010

# *மாதிரி வினா விடை*

சைவமன்றம் வருடாந்தம் நடாத்தும்
சைவசமய அறிவுத் திறன் தேர்வுக்காக,
தேர்வாளர்களின் உபயோகத்திற்கு
சைவமன்ற கல்விப் பிரிவினரின் வெளியீடு - 2010


**The Saiva Manram Inc**
**217 Great Western Highway**
**MAYS HILLS NSW 2145, AUSTRALIA**

**Ph: (02) 9687 1695**

**www.sydneymurugan.org.au**





# சைவமன்றம் நடாத்தும்
# சைவசமய அறிவுத் திறன் - தேர்வு 2010

நமது சிறார்களின் தமிழ், சைவசமய அறிவினை ஊக்குவிப்பதன் நோக்கம் கொண்டு சைவ மன்றம் சமயப்பாடசாலைகளை நடாத்துவதோடு மட்டுமல்லாமல் சைவசமய அறிவுத் தேர்வையும் நடாத்தி வருகின்றது. இந்தத் தேர்வு வழமை போல சித்திரை மாதத்தில் நடைபெறவுள்ளது. இத்தேர்வுகளில் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர், சிறுமியர் பங்குபற்றலாம்.

1. இத்தேர்வுகளில் பங்குபற்றுபவர்கள் அடைந்த தராதரம் அவர்கள் எடுக்கும் புள்ளிகளைக் கொண்டு முதலாம், இரண்டாம் பிரிவுகளாக வகைப்படுத்தப்படும். முதலாம் பிரிவை அடைய குறைந்தது 80 புள்ளிகள் எடுக்க வேண்டும். இரண்டாம் பிரிவை அடைய 60க்கு மேற்பட்ட புள்ளிகளை எடுக்க வேண்டும்.

2. முதற்பிரிவையும், இரண்டாம்பிரிவையும் அடைந்தவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்படும். முதற்பிரிவில் அதிகமான புள்ளிகள் எடுப்பவருக்குக் கேடயமும் வழங்கப்படும். மற்றையவர்களுக்குத் தேர்வில் பங்குபற்றியதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

## தேர்வு நடாத்தப்படும் பிரிவுகள்

| பிரிவுகள் | பிறந்த திகதி விபரம் |
|---|---|
| பாலர் பிரிவு | 01-04-2004 இலும் அதன் பின்னரும் பிறந்தவர்கள் |
| கீழ்ப்பிரிவு | 01-04-2001க்கும் 31-03-2004 க்கும் இடையில் பிறந்தவர்கள் |
| மத்தியபிரிவு | 01-04-98 க்கும் 31-03-2001 க்கும் இடையில் பிறந்தவர்கள் |
| மேற்பிரிவு | 01-04-95 க்கும் 31-03-98 க்கும் இடையில் பிறந்தவர்கள் |
| அதிமேற்பிரிவு | 01-04-92 க்கும் 31-03-95 க்கும் இடையில் பிறந்தவர்கள் |

## நடாத்தப்படவுள்ள தேர்வுகள்

- வர்ணம் தீட்டுதல் (பாலர் பிரிவுக்கு மட்டும்)
- திருக்குறள் மனனம் (பாலர் பிரிவு, கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு)
- திருமுறைப் பாடல் (எல்லாப் பிரிவினருக்கும்)
- திருமுறை ஒப்புவித்தல (எல்லாப் பிரிவினருக்கும்)
- கவிதை மனனம் (கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு)
- சைவசமய அறிவு (எல்லாப் பிரிவினருக்கும்)

# பொதுவான விதிமுறைகள்

1. தேர்வுகளில் பங்குபெறுபவர்கள் தமக்குரிய வயதுப் பிரிவில் மட்டுமே பங்குபற்றலாம்.
2. தேர்வாளர்கள் ஏதாவது மூன்று தேர்வுகளில் மட்டுமே பங்குபற்ற முடியும். திருமுறைப் பாடல் தேர்வில் பங்குபற்றுபவர்கள், திருமுறை ஒப்புவித்தல் தேர்வில் பங்குபற்ற முடியாது.
3. தேர்வுகளில் பங்குபெறுபவர்கள் தேர்வு ஆரம்பிப்பதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னர் தேர்வு நடைபெறும் இடத்தில் தமது வருகைகளைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
4. தேர்வின் போது ஒலிபெருக்கி உபயோகிக்கப்படமாட்டாது.
5. தேர்வுகளில் பங்குபெறுபவர்களின் பங்குபற்றும் வரிசைக்கிரமம் சீட்டிழுப்பின் மூலம் தீர்மானிக்கப்படும்.
6. தேர்வுகளில் பங்குபெறுபவர்களின் தொடக்க உரைகள் சுருக்கமானதாக இருத்தல் வேண்டும்.
7. தேர்வுகளின் பெறுபேறுபற்றி நடுவர்கள் கூறும் தீர்ப்பே முடிவானதாகும்.
8. தேர்வாளர்களின் பெறுபேறுகள் சிட்னி முருகன் மின்வலயத்தில் அறிவிக்கப்படும். http://www.sydneymurugan.org.au
9. தேர்வுகள் பற்றிய அபிப்பிராயங்கள் தேர்வுகள் முடிவுற்று மூன்று நாட்களுக்கு முன்னர் எழுத்து மூலம் சைவமன்ற கல்விப் பொறுப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

# தேர்வுகளுக்கான விண்ணப்ப விபரம்

- விண்ணப்பப் படிவங்களையும், தேர்வு விபரங்களையும் கீழ்க்காணும் இடங்களிற் பெற்றுக்கொள்ளலாம்
    - கோம்புஷ், சிட்னி முருகன் சைவசமயப் பாடசாலைகள்
    - சிட்னி முருகன் கோயில்
    - www.sydneymurugan.org.au இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்

- விண்ணப்பப் படிவங்கள் 10.04.2010 க்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக Director of Educational Activities, The Saiva Manram Inc., 217, Great Western Highway, Mays Hill, NSW 2145 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது சிட்னி முருகன் கோயிலில் – சைவசமய அறிவுத் திறன் – தேர்வு 2010 விண்ணப்பம் – என்று குறிக்கப்பட்ட பெட்டியில் சேர்ப்பிக்கலாம். அனுப்பும் மேலுறையின் இடதுபக்க மூலையில் சைவசமய அறிவுத் திறன் – தேர்வு 2010 என்று எழுதவும்.
- தேர்வுகள் 24/04/10, 02/05/10, 09/05/10ம் நாட்களில் நடைபெறும். தேர்வுகளின் சரியான கால நேர விபரங்களை மேற்கூறிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களுக்கு... **சைவமன்ற கல்விப் பணித்துறைப் பொறுப்பாளர்**
  திரு.S. சிவகுமார் – 9636 6608 / 0410 426 608
  **உபகுழு அங்கத்தவர்கள்** திரு. பா. சிவானந்தா 0422 104 212
  திரு. தியாகராஜா 9764 2138
- இத்தேர்வுகள் சிறப்பாக நடைபெற பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பிள்ளைகள் அனைவரினது ஒத்துழைப்பும் ஆதரவும் அவசியம் தேவை. நமது வருங்கால சந்ததியினரின் சைவசமய அறிவை வளர்ப்பது ஒவ்வொருவரது கடமையாகும்.
- பெற்றோரின் ஒத்துழைப்புக்கு சைவமன்றத்தின் நன்றி.

# தேர்வுகளின் விபரங்கள்

## 1. வர்ணம் தீட்டுதல் (பாலர் பிரிவுக்கு மட்டும்)

இத்தேர்வில் கொடுக்கப்பட்ட மூன்று வரை படங்களில் ஒன்றைத் தெரிவு செய்து வர்ணப் பென்சில்களால் வர்ணம் தீட்ட வேண்டும். தேர்வாளர்கள் வர்ணப் பென்சில்களைக் கொண்டு வரவேண்டும். தேர்வு நடைபெறும் இடத்தில் பங்குபற்றுவோர் மாத்திரம் அனுமதிக்கப்படுவர்.

## 2. திருக்குறள் மனனம்

இத்தேர்வில் பங்குபற்றுவோர் கொடுக்கப்பட்ட எல்லாக் குறள்களையும் மனனம் செய்தல் வேண்டும். அவற்றுள் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டு குறிப்பிட்ட குறள்கள் கேட்கப்படும். மத்தியபிரிவு, மேற்பிரிவுகளில் பங்குபற்றுவோரிடம் அந்தக் குறள்களின் கருத்தும் கேட்கப்படும். அவற்றைக் குறிப்பிட்ட நேரத்துள் சொல்லவேண்டும். தேர்வுகளின் போது உச்சரிப்பு **(20),** மனனம் செய்யும் திறமை **(40),** பொருள் உணர்ந்து கூறுதல் **(20),** சபை மரபும் ஆதிக்கமும் **(20)** ஆகியன கவனிக்கப்படும்.

| பிரிவு | மனனம் செய்ய வேண்டிய குறள்கள் எண்ணிக்கை | தேர்வில் கேட்கப்படும் குறள்கள் எண்ணிக்கை | கொடுக்கப்படும் நிமிடங்கள் |
|---|---|---|---|
| பாலர் பிரிவு | 4 | 3 | 5 |
| கீழ்ப்பிரிவு | 8 | 5 | 6 |
| மத்தியபிரிவு | 8 | 5 | 10 |
| மேற்பிரிவு | 10 | 6 | 10 |

## 3. திருமுறைப் பாடல்கள்

இத்தேர்வில் பங்குபற்றுவோர் தமக்குக் கொடுக்கப்பட்ட எல்லாத் திருமுறைப் பாடல்களையும் (எல்லாப் பிரிவினருக்கும்), திருப்புகழ் ஒன்றையும் (மத்திய, மேல், அதிமேல் பிரிவுகளுக்கு) மனனம் செய்தல் வேண்டும். நடுவர்களால் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடல்கள் கேட்கப்படும். பங்குபற்றுபவர்கள் அவற்றைக் குறிப்பிட்ட நேரத்துள் பண்ணுடன் பாடவேண்டும். தேர்வின் போது உச்சரிப்பு **(20),** மனனம் செய்யும் திறமை **(20),** பண் **(40),** பொருள் உணர்ந்து பாடல் **(10),** சபை மரபும், ஆதிக்கமும் **(10)** ஆகியன கவனிக்கப்படும்.

| பிரிவு | மனனம் செய்ய வேண்டிய பாடல்கள் எண்ணிக்கை | தேர்வில் கேட்கப்படும் பாடல்கள் எண்ணிக்கை | கொடுக்கப்படும் நிமிடங்கள் |
|---|---|---|---|
| பாலர் பிரிவு | 3 | 1 | 3 |
| கீழ்ப்பிரிவு | 3 | 2 | 3 |
| மத்தியபிரிவு | 4 | 3 | 5 |
| மேற்பிரிவு | 6 | 4 | 8 |
| அதி மேற்பிரிவு | 6 | 6 | 10 |

## 4. திருமுறை ஒப்புவித்தல்

இத்தேர்வில் பங்குபற்றுவோர் கொடுக்கப்பட்ட எல்லாத் திருமுறைப் பாடல்களையும் **(**எல்லாப் பிரிவினருக்கும்**)**, திருப்புகழ் ஒன்றையும் **(**மத்திய, மேல், அதிமேல் பிரிவுகளுக்கு**)** மனனம் செய்தல் வேண்டும். நடுவர்களால் சீட்டிழுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட பாடல்கள் கேட்கப்படும். பங்குபற்றுபவர்கள் அவற்றைக் குறிப்பிட்ட நேரத்துள் ஒப்புவித்தல் வேண்டும். தேர்வின் போது உச்சரிப்பு **(20),** மனனம் செய்யும் திறமை **(40),** பொருள் உணர்ந்து பாடல் **(20),** சபை மரபும், ஆதிக்கமும் **(20)** ஆகியன கவனிக்கப்படும்.

| பிரிவு | மனனம் செய்ய வேண்டிய பாடல்கள் எண்ணிக்கை | தேர்வில் கேட்கப்படும் பாடல்கள் எண்ணிக்கை | கொடுக்கப்படும் நிமிடங்கள் |
|---|---|---|---|
| பாலர் பிரிவு | 3 | 1 | 3 |
| கீழ்ப்பிரிவு | 3 | 2 | 3 |
| மத்தியபிரிவு | 4 | 3 | 5 |
| மேற்பிரிவு | 6 | 4 | 8 |
| அதி மேற்பிரிவு | 6 | 6 | 10 |

## 5. கவிதை மனனம் (பாலர் தவிர மற்றைய பிரிவினர்)

இத்தேர்வில் பங்குபற்றுவோர் கொடுக்கப்பட்ட கவிதைகளில் ஒன்றை மட்டும் மனனம் செய்து கவிநடையில் கூறல் வேண்டும். தேர்வின் போது உச்சரிப்பு **(20),** மனனம் செய்யும் திறமை **(40),** பொருள் உணர்ந்து பாடல் **(20),** சபை மரபும், ஆதிக்கமும் **(20)** ஆகியன கவனிக்கப்படும்.

## 6. சைவசமய அறிவு

* பாலர் பிரிவில் பங்குபற்றுபவர்கள் தனித்தனியாக அழைக்கப்பட்டு, நமது தெய்வங்கள், சமயக்குரவர்கள், கோயில் வழிபாடு சம்பந்தமான படங்கள் காட்டப்பட்டு 10 கேள்விகள் கேட்கப்படும்.
* கீழ்ப் பிரிவில் பங்குபற்றுபவர்கள் தனித்தனியாக அழைக்கப்பட்டு 20 கேள்விகள் நடுவர்களால் கேட்கப்படும்.
* மத்திய பிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவுகளில் பங்குபற்றுபவர்களிடம் முறையே 40, 50, 60 கேள்விகள் நடுவர்களால் கேட்கப்படும். அதற்கான சரியான விடைகளைத் தெரிவு செய்து கொடுக்கப்படும் விடைத்தாளில் குறிக்கவேண்டும். (Multiple Choice Questions)
* இந்தத் தேர்வில் பங்குபற்றுவதற்கு தமிழ் எழுத வாசிக்கத் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் தமிழ் விளங்க வேண்டும்.
* தேர்வாளர்கள் உதவிக்காக மாதிரி வினா-விடைகள் தரப்பட்டுள்ளன.

# பாலர் பிரிவு

Below 6 years old on 1st April of the Assessment Year

1. உலகத்தைப் படைத்தவர் யார்?
- கடவுள்.

2. கடவுளை எப்படிக் கும்பிடுகிறோம்?
- கை கூப்பி, தோத்திரங்கள் பாடி, பூசை செய்து கும்பிடுகிறோம்.

3. திருநீற்றை எங்கே பூச வேண்டும்?
- நெற்றியில் பூச வேண்டும்.

4. வெள்ளைத் தாமரையில் இருக்கும் கடவுள் யார்?
- சரசுவதி.

5. சந்தனத்தின் நிறம் என்ன?
- மஞ்சள் நிறம்.

6. குங்குமத்தின் நிறம் என்ன?
- சிவப்பு நிறம்.

7. வேலைத் தாங்கிய கடவுள் யார்?
- முருகன்.

8. மோதகத்தைக் கையில் வைத்திருக்கும் கடவுள் யார்?
- பிள்ளையார்

9. புலித்தோலை அணிந்த கடவுள் யார்?
- சிவபெருமான்.

10. சிவனின் பக்கத்தில் இருப்பவர் யார்?
- பார்வதி.

11. முருகனின் அண்ணன் யார்?
- பிள்ளையார்.

12. எந்தக் கடவுளை ஆனைமுகன் என வணங்குகிறோம்?
- பிள்ளையார்.

13. கோயில் வாசலில் இருப்பது என்ன?
- கோபுரம்.

14. செல்வத்தைத் தரும் கடவுள் யார்?
- இலட்சுமி.

15. வீரத்தைத் தரும் கடவுள் யார்?
- துர்க்கை.

16. கல்வி தரும் கடவுள் என யாரைக் கும்பிடுகிறோம்?
- சரசுவதி.

17. நாம் சாப்பிடத் தொடங்கு முன் என்ன செய்ய வேண்டும்?
- கடவுளைக் கும்பிட வேண்டும்.

18. மூன்று வயதில் தேவாரம் பாடியவர் யார்?
- திருஞான சம்பந்தர்.

19. ஐங்கரன் என்று அழைக்கப்படும் கடவுள் யார்?
- பிள்ளையார்.

20. கோயிலுக்கு நாம் ஏன் போகிறோம்?
- கடவுளைக் கும்பிடுவதற்கு.

21. பூசைக்கு வேண்டிய பொருட்கள் எவை?
- பூ, பழம், கற்பூரம், சாம்பிறாணி என்பன.

22. கோயிலுக்கு எப்படிப் போக வேண்டும்?
- குளித்து, தூய ஆடை அணிந்து போகவேண்டும்.

23. முருகனுடைய வேறு பெயர்கள் எவை?
- கந்தன், கடம்பன், வேலன், சரவணன், ஆறுமுகன்.

24. திருநீற்றை பூசும்போது என்ன சொல்லிப் பூசவேண்டும்?
- சிவசிவ என்று சொல்லிப் பூசவேண்டும்.

25. திருநீற்றை எப்படி வாங்க வேண்டும்?
- இரண்டு கைகளையும் நீட்டி வலக்கையினால் வாங்க வேண்டும்.

26. திருநீற்றைக் கீழே கொட்டலாமா?
- திருநீற்றைக் கீழே கொட்டக் கூடாது.

27. திருநீற்றை நெற்றியில் பூசி மிஞ்சினால் என்ன செய்ய வேண்டும்?
- நெற்றியில் பூசி மிஞ்சினால் உடம்பில் பூச வேண்டும்.

28. முருகனின் வாகனம் என்ன?
- மயில்.

29. ஐந்து கரத்தனை என்று தொடங்கும் பாடலை எந்தத் தெய்வத்தை நினைந்து பாடுகிறோம்?
- பிள்ளையாரை நினைந்து பாடுகிறோம்.

30. தோடுடைய செவியன் என்ற தேவாரத்தைப் பாடிய நாயனார் யார்?
- திருஞானசம்பந்தர்.

31. சிவப்புத் தாமரைப் பூவில் இருக்கும் கடவுள் யார்?
- இலட்சுமி.

32. அர்ச்சனைக்குக் கொடுக்கும் தட்டில் வைக்கும் மூன்று பொருட்கள் கூறுக?
- பூ, பழம், தேங்காய், கற்பூரம், ஊதுபத்தி, பட்டு.

33. எந்தக் கடவுள் தன் தலையில் சந்திரனையும், நதியையும் வைத்திருக்கின்றார்?
- சிவன்

34. தீர்த்தத்திற்கு முதல்நாள் நடைபெறும் திருவிழாவின் பெயர் என்ன?
- தேர்த்திருவிழா

35. கோயிலில் இறைவனுக்கு பூசையின்போது படைக்கப்படும் உணவுப் பொருட்களை எவ்வாறு கூறுவர்?
- நைவேத்தியம்.

# கீழ்ப் பிரிவு

Between 6 and 9 years old on 1st April of the Assessment Year

கீழ்ப்பிரிவுக்கு மேலதிகமானவை

(பாலர் பிரிவு வினாக்களுடன்)

1. கடவுளை வழிபடுவதற்குரிய சிறப்பான இடம் எது?
- கோயில்

2. கோயிலுக்குச் சென்றதும் முதலில் எந்தக் கடவுளை வணங்கவேண்டும்?
- பிள்ளையாரை

3. கோயிலைச் சுற்றிவந்து கும்பிடுவதை எப்படி அழைக்கிறோம்?
- வலம் வருதல்

4. தேவாரம் பாடியவர்கள் யார்?
- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார்.

5. திருவாசகம் பாடியவர் யார்?
- மாணிக்கவாசகர்

6. "தோடுடைய செவியன" என்ற பாடல் தேவாரமா? அல்லது திருவாசகமா?
- தேவாரம்.

7. 'சொற்றுணை வேதியன்' என்ற தேவாரத்தைப் பாடியவர் யார்?
- திருநாவுக்கரசர்

8. சிவபுராணம் எந்தப் பாடல் தொகுப்பில் உள்ளது?
- திருவாசகம்.

9. சிவபுராணம் எப்படித் தொடங்குகிறது.
- நமச்சிவாய வாழ்க என்று தொடங்குகிறது.

10. சேக்கிழார் பாடிய புராணம் எது?
- பெரியபுராணம்

11. வேலும், மயிலும் எந்தத் கடவுளுக்கு உரியவை?
- முருகன்.

12. பொங்கல் விழாவின் போது எந்தத் தெய்வத்துக்கு விசேடமாக நன்றிகூறி வணங்குகிறோம்.
- சூரியன்.

13. 'உழவாரம்' என்ற கருவியால் கோயில்களின் சுற்றாடலைச் சுத்தம் செய்த நாயனார் யார்?
- அப்பர் சுவாமிகள் ∴ திருநாவுக்கரசு நாயனார்.

14. அரசன் அப்பரைக் கல்லில் கட்டிக் கடலில் போட்டபோது அவர் பாடிய தேவாரம் எது?
- சொற்றுணை வேதியன் என்று தொடங்கும் பதிகம்.

15. பாண்டிய மன்னனின் மந்திரியாக இருந்த சமய குரவர் யார்?
- மாணிக்கவாசக சுவாமிகள்.

16. 'ஓம்காரம்' என எந்த ஒலியைக் குறிப்பிடுகிறோம்?
- ஓம் என்னும் ஒலியை.

17. பிள்ளையாரின் வாகனம் எது?
- எலி

18. நவராத்திரி நாள்களில் நாம் வழிபடும் மூன்று தெய்வங்களின் பெயர் கூறுக?
- துர்க்கை, இலக்குமி, சரசுவதி.

19. சிட்னி முருகன் கோயில் எங்கே இருக்கிறது?
- வெஸ்ட் மீட்டில் உள்ள வைகாசிக் குன்றில்.

20. திருப்புகழ் எந்தத் கடவுள் மீது பாடப்பட்டுள்ளது?
- முருகன்.

21. அபிராமி அந்தாதி பதிகத்தைப் பாடியவர் யார்?
- அபிராமிப் பட்டர்

22. ஆண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
- அட்டாங்க நமஸ்காரம்

23. பெண்கள் செய்யும் நமஸ்காரம் எது?
- பஞ்சாங்க நமஸ்காரம்

24. நவக்கிரகங்களில் நடு நாயகமாக விளங்கும் கிரகம் எது?
- சூரியன்

25. முருகன் சூரபன்மனை எவ்வாறு ஆட்கொண்டார்?
- சேவலும் மயிலுமாக

26. முருகனது கொடியும் வாகனமும் எவை?
- சேவலும் மயிலும்

27. தலையணையாக இருந்த செங்கட்டிகள் பொன்கட்டிகளாகமாறியது யாரிடம்?
- சுந்தரமூர்த்தி நாயனாரிடம்

28. நஞ்சுண்டகண்டன் யார்?
- சிவபெருமான்

29. திருநாவுக்கரசரின் இயற்பெயர் என்ன?
- மருள்நீக்கியார்

30. திருநாவுக்கரசரின் தமக்கையார் பெயர் என்ன?
- திலகவதியார்

31. திருநாவுக்கரசர் முதலில் பாடிய தேவாரம் என்ன?
- கூற்றாயினவாறு

32. திருக்கோணேச்சரத்தின் மீது தேவாரம் பாடிய நாயனார் யார்?
- திருஞானசம்பந்தர்

33. கோயிலில் காணப்படும் முக்கியமான பொருட்கள் எவை?
- விக்கிரகங்கள், விளக்கு, மணி.

34. கோயில் பூசையின் போது கடைசிப் பூசை பெறுபவர் யார்?
- சண்டேசுவரர்

35. கோயிலில் பூசை முடிந்தபின் எவற்றைப் பிரசாதமாக வழங்குவர்?
- திருநீறு, தீர்த்தம், சந்தனம், குங்குமம், பூ.

36. கோயிலில் பிரதான மூர்த்தியை வைத்து வணங்கும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்
- கருவறை / கர்ப்பக்கிரகம் / மூலஸ்தானம்

37. இரவு முழுவதும் விழித்திருந்து சிவனை வழிபடும் நாள் எது?
- சிவராத்திரி.

38. நவராத்திரியின் போது எத் தெய்வத்தைக் கடைசி மூன்று நாட்களும் வணங்குகிறோம்?
- சரசுவதியை

39. நெற்றிக்கண்ணை உடையவர் யார்?
- சிவபெருமான்

40. சிவனின் தலையில் இருப்பவை எவை?
- கங்கை, பிறை, பாம்பு

41. சைவர்களின் முழுமுதற் கடவுள் யார்?
- சிவபெருமான்.

42. சிவசின்னங்கள் யாவை?
- திருநீறு, உருத்திராக்கம்

43. திருவாதவூரர் என்றால் யாரைக் குறிக்கும்?
- மாணிக்கவாசகரை

44. ஐந்து கரத்தனை.. என்று தொடங்கும் திருமந்திரத்துக்கு ஏற்ற கடவுள் யார்?
- பிள்ளையார்.

45. ஆறுமுகன் என அழைக்கப்படும் கடவுள் யார்?
- முருகன்.

46. ஔவையாருக்கு உதவ முருகன் எந்த வேடத்தில் வந்தார்?
- இடைச் சிறுவனாக வந்தார்.

47. சிட்னிக்கு அருகில் வெங்கடேஸ்வரர் (விஷ்ணு) கோயில் எங்கே உள்ளது?
- ஹெலன்ஸ்பேர்க்

48. சிட்னிக்கு அருகில் சிவன் கோயில் எங்கே உள்ளது?
- மின்ரோ

49. முருகனுடைய மறுபெயர்கள் யாவை?
- கந்தன், குகன், குமரன், கடம்பன், வேலன், சரவணன், ஆறுமுகன், சண்முகன், சேயோன், செவ்வேள், தேவசேனாதிபதி, சிவகுருநாதன்

50. பிள்ளையாரின் மறுபெயர்கள் யாவை?
- விநாயகர், கணபதி, விக்னேசுவரர், கணேசர், ஆனைமுகன், லம்போதரன், கணநாதன்.

51. தை மாதத்தில் வரும் தமிழர் பண்டிகை எது?
- தைப் பொங்கல்

52. சிவபெருமானுக்கு உரிய விசேட விரத நாள் எது?
- சிவராத்திரி

53. சிவனது வாகனம் எது?
- இடபம்

54. சிவபெருமானிடம் இருந்த மாம்பழத்தைப் பிள்ளையார் எப்படிப் பெற்றார்?
- உலகமாகிய( (சிவன்-பார்வதி) தாய் தந்தையரைச் சுற்றி வந்து.

55. அர்ச்சனைத் தட்டில் வைக்கக்கூடிய பொருட்கள் யாவை?
- பூ, பழம், தேங்காய், கற்பூரம், ஊதுபத்தி, பட்டு, வெற்றிலை, பாக்கு

56. முருகன் பக்கத்தில் இருப்பவர்கள் யாவர்?
- தெய்வயானை (இடப்பக்கம்), வள்ளி (வலப்பக்கம்).

57. முக்கனிகள் எவை?
- மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம்

58. கோயிலில் பூசை செய்பவர் எப்படி அழைக்கப்படுகிறார்?
- ஐயர், பூசகர், குருக்கள் என அழைக்கப் படுகின்றனர்.

59. கோயில் உள்ளே இருக்கும்போது எப்படி இருக்க வேண்டும்?
- அமைதியாக, கடவுள் நினைவாக, ஓடியாடி விளையாடாமல் இருத்தல் வேண்டும்.

60. பிள்ளையாருக்கு உகந்த புல் எது?
- அறுகம் புல்

61. கோயில் திருவிழாவின் முதல் நாளில் நடப்பது என்ன?
- கொடியேற்றம்

62. காக்கும் கடவுள் எனப்படுபவர் யார்?
- விஷ்ணு

63. பைரவரின் வாகனம் எது?
- நாய்

64. நாம் எக்காரியத்தைச் செய்யத் தொடங்க முன்னர் எந்தக் கடவுளை வழிபாடு செய்தல் வேண்டும் ?
- பிள்ளையரை

65. சிவபுராணத்தில் எத்தனை வரிகள் உள்ளன?
- தொண்ணூற்றைந்து வரிகள்

66. சுந்தரமூர்த்தி நாயனாரின் இயற் பெயர் என்ன?
- நம்பியாரூரர்

67. முருகனிடம் சுட்ட பழம் பெற்ற பாட்டி யார்?
- ஔவையார்

68. திருநீற்றின் பெருமையை எமக்கு எடுத்துக் காட்டும் ஒரு தேவாரம் என்ன?
- மந்திரமாவது நீறு

69. திருவெம்பாவை விரதம் வரும் மாதம் எது?
- மார்கழி மாதம்.

70. காரைக்கால் அம்மையாரின் இயற் பெயர் என்ன?
- புனிதவதியார்

71. ஐந்தெழுத்து மந்திரம் எனப்படுவது எது?
- சிவாயநம / நமசிவாய

72. ஆறெழுத்து மந்திரம் எனப்படுவது எது?
- சரவணபவ / நமோகுமாராய












# கீழ்ப் பிரிவு

## திருக்குறள் மனனத் தேர்வு

தேர்வாளர்கள் கீழே கொடுக்கப்பட்ட எட்டுக் குறள்களையும் மனனம் செய்தல் வேண்டும். தேர்வாளர்களிடம் இவற்றில் ஐந்து குறள்கள் மட்டும் தேர்வுக்காகக் கேட்கப்படும்.

---

1. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
   செயற்கரிய செய்கலா தார்.

2. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
   கணமேயுங் காத்தல் அரிது.

3. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
   நல்லாற்றின் நின்ற துணை.

4. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
   பருவந்து பாழ்படுதல் இன்று.

5. அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
   சிறுகை அளாவிய கூழ்.

6. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
   பண்பும் பயனும் அது.

7. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
   தெய்வத்துள் வைக்கப் படும்.

8. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
   சான்றோன் எனக்கேட்ட தாய்.

# கீழ்ப் பிரிவு

## திருமுறைப் பாடல் தேர்வு, திருமுறை ஒப்புவித்தல் தேர்வு

இவற்றில் இரண்டு திருமுறைகள் கேட்கப்படும்.
ஆனால் மூன்று திருமுறைகளையும் மனனம் செய்திருத்தல் வேண்டும்.

---

**1. தேவாரம்** **பண் – நட்டராகம், இராகம் – பந்துவராளி**

நீள நினைந்தடியேன் உனை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டை யூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே.

**2. தேவாரம்** **பண் – கொல்லி, இராகம் – நவரோசு**

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்நாமம்என் நாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

**3. திருவாசகம்**

வானாகி மண்ணாகி வளிஆகி ஒளிஆகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான்எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.

# கீழ்ப் பிரிவு

## கவிதை

தேர்வாளர்கள் இந்தக் கவிதையை, கவிதை நடையில் தேர்வின் போது பொருளுணர்ந்து சொல்லல் வேண்டும்.

---

### வா வா

ஒளி படைத்த கண்ணினாய் வாவாவா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவாவா

களி படைத்த மொழியினாய் வாவாவா
கடுமை கொண்ட தோளினாய் வாவாவா

தெளிவு பெற்ற மதியினாய் வாவாவா
சிறுமை கண்டு பொங்கினாய் வாவாவா

எளிமை கண்டு இரங்குவாய் வாவாவா
ஏறு போல் நடையினாய் வாவாவா

வெற்றி கொண்ட கையினாய் வாவாவா
விநய நின்ற நாவினாய் வாவாவா

முற்றி நின்ற வடிவினாய் வாவாவா
முழுமை சேர் முகத்தினாய் வாவாவா

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

# சைவமன்றம்

# சைவசமய அறிவுத் திறன் – தேர்வு 2010

## TIME TABLE

| பிரிவு | தேர்வு | திகதி | நாள் | நேரம் |
|---|---|---|---|---|
| பாலர்பிரிவு | வர்ணம் தீட்டுதல் | 24.04.2010 | சனிக்கிழமை | பி.ப. 1.30 மணி |
| பாலர்பிரிவு | திருக்குறள் | 24.04.2010 | சனிக்கிழமை | பி.ப. 3.30 மணி |
| பாலர்பிரிவு | திருமுறை பாடல் | 02.05.2010 | ஞாயிறு | மு.ப. 9.00 மணி |
| பாலர்பிரிவு | திருமுறை ஒப்புவித்தல் | 02.05.2010 | ஞாயிறு | மு.ப. 9.00 மணி |
| பாலர்பிரிவு | சமய அறிவு | 09.05.2010 | ஞாயிறு | மு.ப. 9.00 மணி |
| கீழ்ப்பிரிவு | திருக்குறள் | 24.04.2010 | சனிக்கிழமை | பி.ப. 1.30 மணி |
| கீழ்ப்பிரிவு | திருமுறை பாடல் | 02.05.2010 | ஞாயிறு | மு.ப. 10.30 மணி |
| கீழ்ப்பிரிவு | திருமுறை ஒப்புவித்தல் | 02.05.2010 | ஞாயிறு | மு.ப. 10.30 மணி |
| கீழ்ப்பிரிவு | கவிதை | 09.05.2010 | ஞாயிறு | மு.ப. 10.30 மணி |
| கீழ்ப்பிரிவு | சமய அறிவு | 09.05.2010 | ஞாயிறு | பி.ப. 1.00 மணி |
| மத்தியபிரிவு | திருக்குறள் | 24.04.2010 | சனிக்கிழமை | மு.ப. 9.00 மணி |
| மத்தியபிரிவு | திருமுறை பாடல் | 02.05.2010 | ஞாயிறு | பி.ப. 1.30 மணி |
| மத்தியபிரிவு | திருமுறை ஒப்புவித்தல் | 02.05.2010 | ஞாயிறு | பி.ப. 1.30 மணி |
| மத்தியபிரிவு | கவிதை | 09.05.2010 | ஞாயிறு | மு.ப. 9.00 மணி |
| மத்தியபிரிவு | சமய அறிவு | 09.05.2010 | ஞாயிறு | பி.ப. 1.30 மணி |
| மேற்பிரிவு | திருக்குறள் | 24.04.2010 | சனிக்கிழமை | மு.ப. 11.00 மணி |
| மேற்பிரிவு | திருமுறை பாடல் | 02.05.2010 | ஞாயிறு | பி.ப. 3.00 மணி |
| மேற்பிரிவு | திருமுறை ஒப்புவித்தல் | 02.05.2010 | ஞாயிறு | பி.ப. 3.00 மணி |
| மேற்பிரிவு | கவிதை | 09.05.2010 | ஞாயிறு | மு.ப. 12.00 மணி |
| மேற்பிரிவு | சமய அறிவு | 09.05.2010 | ஞாயிறு | பி.ப. 3.00 மணி |
| அதிமேற்பிரிவு | திருமுறை பாடல் | 02.05.2010 | ஞாயிறு | பி.ப. 4.30 மணி |
| அதிமேற்பிரிவு | திருமுறை ஒப்புவித்தல் | 02.05.2010 | ஞாயிறு | பி.ப. 4.30 மணி |
| அதிமேற்பிரிவு | சமய அறிவு | 24.04.2010 | சனிக்கிழமை | மு.ப. 10.00 மணி |
| அதிமேற்பிரிவு | கவிதை | 09.05.2010 | ஞாயிறு | மு.ப. 9.00 மணி |

**பரிசளிப்பு விழா 06.06.2010 ஞாயிறு பிற்பகல் 4.15 மணி**

சகல பிரிவுகளிலும் ஏதாவது மூன்று தேர்வுகளில் மட்டுமே பங்குபற்ற முடியும். திருமுறைப்பாடல் தேர்வில் பங்குபற்றுபவர்கள், திருமுறை ஒப்புவித்தல் தேர்வில் பங்குபற்ற முடியாது.

தேர்வு ஆரம்பிக்க 30 நிமிடங்களுக்கு முன்னராக உங்கள் வரவை தேர்வு நடைபெறும் இடங்களில் பதிவு செய்து இத்தேர்வுகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைக்கும்படி சைவ மன்றத்தினர் அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

**Please refer to the Sydney Murugan Temple Web page**
**www.sydneymurugan.org.au**